**வானவில் கலையகம்**
உங்கள் இல்லத்தில் நடைபெறும் நிகழ்வுகள் எதுவானாலும் சிறந்த முறையில் அதி உயர் தொழில்நுட்பத்தில் வீடியோ படம் பிடித்திடவும் போட்டோ அல்பம் தயாரித்திடவும்
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகள் Internetமூலம் உங்கள் இல்ல நிகழ்வுகள் , ஆலய நிகழ்வுகள் எதுவானாலும் அதி உயர் தரத்தில் நேரடியாக (LIVE TLECAST) மூலம் பார்த்து மகிழ்ந்திடவும்
தொடர்பு கொள்ளுங்கள்
**வானவில் கலையகம்**
இல 330, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்தி) யாழ்ப்பாணம்
0212229466 , 0772487550
www.vanavilstudio.com

10/=
பக்கங்கள் 06
# எதிரொலி
Ethiroli
குரல் 01 அதிர்வு 65 வெள்ளிக்கிழமை ஜூலை 14 2017 ethirolimedia@gmail.com 48



# பிரபாகரனை மீட்கவில்லை



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை மீட்க முயற்சிக்கவில்லை என இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் ஓ பிளக் தெரிவித்துள்ளார்.


பிரபாகரனை மீட்பதற்கு முயற்சித்ததாக செய்யப்படும் பிரச்சாரங்கள் வெறும் கற்பனையே என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பல்களை அமெரிக்கா தாக்கி அழித்தது என்ற தகவல் பொய்யானது. எனினும் புலிகளின் கப்பல்களின் நிலைகள் பற்றிய புலனாய்வுத் தகவல்களை இலங்கைக் கடற்படையினருக்கு வழங்கினோம்.

06

# அதிகாரத்தை கைப்பற்றுங்கள்

## இளைஞர்களுக்கு முதல்வர் அழைப்பு



பொலிஸ் அதிகாரத்தை நாங்கள் பெற்றுக்கொள்வதற்கு எமது இளைஞர் யுவதிகள் பொலிஸ் உத்தியோகத்தில் இணைய வேண்டும் என அழைப்பு விடுத்திருக்கும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் அவ்வாறு இணைவதனூடாகவே எமது பிரதேசத்தில் எம்மால் ஆதிக்கம் செலுத்த முடியும் என்பதை எமது இளைஞர்கள் உணரவேண்டும் எனவும் தெரிவித்திருக்கிறார்.

வட மாகாண பொலிஸ் உத்தியோகத்தர்களை முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் கைதடியிலுள்ள தமது அலுவலகத்தில் இன்று சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பின்பின்னர்

06



# கோத்தாவை கைதுசெய்ய முயற்சி

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச எதிர்வரும் நாட்களில் கைதுசெய்யப்படவுள்ளதாக சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

டீ.ஏ.ராஜபக்ச கல்லறையை நிர்மாணிப்பதற்காக பணம் ஒதுக்கியமை தொடர்பிலான விசாரணைக்கமைய இந்த கைது இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கையில் பிரபல அமைச்சர்கள் இருவர் நேரடியாக தலையிட்டுள்ளனர். சட்டமா அதிபர் திணைக்களமும் அனுமதி வழங்கியுள்ளதாக குறித்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. இதேவேளை நேற்று முன்தினம் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அமைச்சர்கள், உறுப்பினர்கள் சந்திப்பில் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ)

# வடமராட்சி மீனவரை சந்தித்தார் டக்ளஸ்



பருத்தித்துறையில் மேற்கொள்ளப்படவிருக்கும் துறைமுக விஸ்தரிப்புக்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர். இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி செயலாளருமான டக்ளஸ் தேவானந்தா இன்று அப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். இதன்போது அவர் அப்பகுதி மக்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார். (எ-11)

# கடற்படையின் முன்னாள் பேச்சாளருக்கு விளக்கமறியல்



கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பீ. தசநாயக்க எதிர்வரும் 19ம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இன்றைய தினம் தசாநாயக்க, கொழும்பு கோட்டே நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்த நிலையிலேயே அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கடந்த புதன்கிழமை கடற்படையின் முன்னாள் பேச்சாளர் தசநாயக்கவை கைது செய்திருந்தனர். கடந்த மஹிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் வெள்ளவத்தையைச் சேர்ந்த 5 தமிழ் இளைஞர்கள் உள்ளிட்ட 11 பேர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் தசநாயக்க மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. 2008 மற்றும் 2009ம் ஆண்டு காலப்பகுதியில் இந்த சம்பவங்கள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# ஊழல் ஒழிப்புக்கு செயலகம் திறப்பு

பாரிய நிதி மோசடிகள், ஊழல்கள் உள்ளிட்ட குற்றச்செயல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்குப் புதிய செயலகமொன்று நிறுவப்பட உள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் பணிப்புரைக்கு அமைய இந்த செயலகம் உருவாக்கப்பட உள்ளது.

இது தொடர்பிலான சட்ட மூலமொன்றும் விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச தர நிர்ணயங்களின் அடிப்படையில் இந்தப் புதிய செயலகம் இயங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஊழல் மோசடிகள் உள்ளிட்ட குற்றச் செயல்களுக்கு எதிராகக் காத்திரமான விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் நோக்கில் இந்தப் புதிய செயலகம் உருவாக்கப்பட உள்ளது. (எ)

# மயிலிட்டி மருத்துவமனையை விடுவிக்க கோரிக்கை

மயிலிட்டி காச நோய் வைத்தியசாலையின் காணியை விடுவிப்பது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் அப்பிரதேசத்தில் சொகுசு விடுதிகளை அமைத்துள்ளதாகக் கூறப்படும் நிலையில் அவற்றை விடுவிப்பது தொடர்பில் இராணுவத் தரப்புடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாக சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மயிலிட்டிப் பிரதேசம் அண்மையில் விடுவிக்கப்பட்டது. எனினும் காசநோய் வைத்தியசாலைப் பிரதேசம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வைத்தியசாலை முற்றாக சேதமடைந்துள்ளபோதிலும் அப்பிரதேசத்தில் இராணுவத்தினர் விடுதி மற்றும் தளம் அமைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இவ்வைத்தியசாலையை விடுவிப்பதன் மூலம் மீள அப்பிரதேசத்தில் வைத்தியசாலையை நிறுவமுடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(எ-212)

# கதிர்காமத்துக்கு பாதயாத்திரை



கதிர்காமம் கொடியேற்றத் தினை முன்னிட்டு மலையகத் தின் பல்வேறு பிரதேசத்தைச் சேர்ந்த பக்தர்கள் இம்முறையும் பாதயாத்திரையை ஆரம்பித்துள் ளனர். மலையகத்தின் மஸ் கெலியா, சாமிமலை, நல்ல தண்ணி, பொகவந்தலாவ ஆகிய தோட்டப்பகுதிகளிலுள்ள பக்தர்கள் 10ஆவது ஆண்டாக இந்த பாதயாத்திரையை ஆரம் பித்துள்ளனர்.

கதிர்காம ஆடிவேல் விழா எதிர்வரும் ஜூலை மாதம் 23ஆம் திகதி கொடியேற்றத்து டன் ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 6ம் திகதி தீர்த்தோற்சவத் துடன் நிறைவடையவுள்ளதாக கதிர்காம ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். இதனை முன்னிட்டு நாட்டின் பல பாகங்களிலிருந்து பக்தர்கள் பாதயாத்திரையை முன்னெடுத் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# வைத்தியசாலை கட்டடம் திறப்பு




காத்தான்குடி ஆதார வைத் தியசாலையில் 18 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப் பட்டுள்ள வைத்திய நிபுணர் தங்குமிட விடுதிக் கட்டடம் மற்றும் புனரமைக்கப்பட்ட பல் வைத்திய சிகிச்சை நிலை யம் மற்றும் வெளிநோயாளர் பிரிவு என்பன நேற்று வியாழக் கிழமை கிழக்கு மாகாண முத லமைச்சர் ஹாபீஸ் நசீர் அக மட்டினால் திறந்து வைக்கப் பட்டன.

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக்கின் வேண்டுகோளின் பேரில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் நிதியொதுக்கீட் டில் இந்தப் புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

இதன் போது வைத்திய நிபுனர்கள் தங்குமிட விடுதிக் கட்டிடம் மற்றும் புனரமைக் கப்பட்ட பல் வைத்திய சிகிச்சை நிலையம் மற்றும் வெளிநோயா ளர் பிரிவு என்பன திறந்து வைக் கப்பட்டன. (உ)

## ஊழலை மறைக்க
# திசைதிருப்பல் முயற்சி



புத்த தர்மம் மற்றும் நாட்டிலுள்ள கட்டளைச் சட்டத்தின் படி செயற் பட்டுக் கொண்டிருக்கும் போது, விடயங்களை திரிவுபடுத்தி அடிப்படை யற்ற கருத்துக்களை பரப்புவதற்கு சிலர் முயற்சித்துக் கொண் டிருப்பது வருத்தமளிக் கும் விடயம் என்று கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றினை வெளி யிட்டுள்ள அவர், இவ்வாறான பிரச்சாரங்கள் ஊடாக நாட்டின் பௌத்த பாரம்பரியத்தை வீழ்த்தும் திட்டம் இருக்கின்றதோ என்ற சந்தே கம் ஏற்படுவதாக தெரிவித்துள்ளார். (உ)

# இலங்கைக்கு 71 ஆவது இடம்

மக்கள் புலம்பெயர்ந்து வாழக் கூடிய சிறந்த நாடுகளின் பட்டியல் ஒன்றை அமெரிக்க செய்தி மற்றும் உலக ஆய்வு நிறுவனம் வெளியிட்டுள் ளது. இப்பட்டியலில் இலங்கைக்கு 71 ஆவது இடம் கிடைத்துள்ளது.

மக்கள் புலம்பெயர்ந்து வாழக் கூடிய சிறந்த நாடாக சுவீடன் பெய ரிடப்பட்டுள்ளது. அத்துடன், இரண்டா மிடத்தை கனடாவும், மூன்றாமிடத்தை சுவிட்சர்லாந்தும், நான்காமிடத்தை அவுஸ்திரேலியாவும் பெறுகின்றன. நியூசிலாந்து 13வது இடத்தில் உள்ள அதேநேரம் சிங்கப்பூர் 18ஆவது இடத் திலும் உள்ளன.

மேலும் மலேசியா 57ஆவது இடத் தையும், இந்தியா 72ஆவது இடத்தை யும் பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு நாட் டினதும் தனிநபர் வருமானம், ஆயுட் காலம், அரச உதவிகள், தாராள மனப் பான்மை, சுதந்திரம் உள்ளிட்ட விட யங்களை அடிப்படையாக கொண்டு இப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. (உ)

# கொழும்பில் மருத்துவக் கண்காட்சி




மஹஜன சுவதன என்ற பெயரி லான மக்கள் ஆரோக்கிய மருத்துவ கண்காட்சி இன்று கொழும்பு பண் டாரநாயக்க மாநாட்டு மண்டபத் தில் ஆரம்பமாகியது.

இந்தக் கண்காட்சி எதிர்வரும் 16ம் திகதி வரை இடம்பெறும். சுகாதார போஷாக்கு மற்றும் சுதே சிய மருத்துவத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன கண் காட்சியை இன்று முற்பகல் பத்து மணிக்கு ஆரம்பித்துவைத்தார். இரவு ஒன்பது மணிவரை கண்காட்சி இடம்பெறும்.

இலங்கை பொது மருத்துவ நிபு ணர்கள் சங்கத்தின் 50வது ஆண்டு நிறைவை முன்னிட்டு கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு தேசிய வர்த்தக சம்மேள னம், சுகாதார அமைச்சு ஆகியவற்றின் முழுமையான ஒத்துழைப்பும் கிடைத் துள்ளதாக சிறப்பு நிபுணர் பிரியங்கர ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். (உ)


# பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு

மன்னார் தலைமை பொலிஸ் நிலையத்தில் சிறுகுற்றப்பிரிவில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பொதுமக்கள் சிலர் முறைப்பாடு மேற்கொண்டுள்ளனர்.

மன்னார் தலைமை பொலிஸ் நிலையத்தில் சிறுகுற்றப்பிரிவில் பணியாற்றும் அதிகாரிகள் சிலர் பக்கச் சார்பாக நடந்து கொள்வதாகவும் பொய் யான குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்து விசாரணைகள் மேற்கொண்டு வருவ தாகவும் அவர்களின் விசாரணைகள் நேர்மையான முறையில் அமைந்திருக்க வில்லை எனவும் மக்கள் குற்றஞ்சாட்டி யுள்ளனர். (உ)

## தமிழின உணர்வாளர்
## ஓவியர் வீரசந்தானம் மறைந்தார்



தமிழ்ப்பற்றாளரும் சிறந்த ஓவியருமான வீர சந்தானம் (வயது-71) சென்னையில் நேற்று காலமானார்.

மூச்சுத்திணறல் ஏற் பட்டு அவதிப்பட்ட அவர் தனியார் மருத்துவமனை யில் சிகிச்சை பலனில்லா மல் மரணமடைந்தார்.

தஞ்சை முள்ளிவாய்க்கால் முற்றம் என்ற ஈழத் தமிழர்களின் நினைவகத்தை தனது ஓவியத் திற னால் நிஜமாக்கித் தந்த ஓவியர் வீரசந்தானம் தமிழ் மக்களுக்கான கலையையும் மண்ணுக் கான அரசியலையும் சுமந்து திரிந்தவர்.

கடந்த ஆண்டு அவருக்கு உடல்நலத்தில் குறைபாடு ஏற்பட்டது. பல மாதங்கள் மருத்துவ சிகிச்சை பெற்ற அவர் நோயிலிருந்து மீண்டு, தமிழர் நலன் சார்ந்த பணிகளை மேற்கொண்டி ருந்தார். எனினும் திடீர் உடல்நலக்குறைவு கார ணமாக அவர் காலமானார். (உ)

## அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழக கரப்பந்தாட்டத் தொடர்:
# மத்தி, வளர்மதி அரையிறுதிக்குத் தகுதி





அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதி யான கரப்பந்தாட்டத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டங்களில் ஆவரங்கால் மத்தி மற்றும் புத்தூர் வளர்மதி அணிகள் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறின.

முதலில் நடைபெற்ற ஆட்டத்தில் அச்சுவேலி யூத் அணியை எதிர்த்துக் களமிறங்கிய ஆவரங்கால் மத்தி அணி, 25:14, 25:17 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன் னேறியது. ஆட்டநாயகனாக மத்தியின் சிந்துயன் தெரிவுசெய்யப்பட்டார்.

மற்றொரு ஆட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழகத்தை எதிர் கொண்ட புத்தூர் வளர்மதி அணி, சிறப் பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

இதன் பயனாக அந்த அணி 25:17, 25:22 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்ற அரையிறுதிக்கு முன்னேறியது.

இந்த ஆட்டத்தின் நாயகனாக புத்தூர் வளர்மதியின் கேமலன் தெரிவுசெய்யப் பட்டார். (ஐ)

மாதாந்தம்
ஒரு இலட்சம் வரை
சம்பாதிக்கலாம்

விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்

தொடர்புகளுக்கு : 021 300 4848


## காதலோடு கைது!

அமெரிக்காவில் நபர் ஒருவர் தன்னைக் கைது செய்யும் போது, தனது காதலை காதலியிடம் தெரியப்படுத்தியுள்ளார்.
ஒக்லோமா மாநிலத்தைச் சேர்ந்த தொம்சன் என்பவர் லின்ரா கேத் என்ற பெண்ணை காதலித்து வந்துள்ளார்.
தனது காதலை அவர் காதலியிடம் பலமுறை சொல்வதற்கு முயற்சி செய்து அது தோல்வியில் முடிந்துள்ளது.
இந்நிலையில் தனது பிறந்தநாளன்று காதலைத் தெரியப்படுத்தலாம் எனத் திட்டமிட்டிருந்தார்.
இந்நிலையில், பல்வேறு குற்றங்களைப் புரிந்துள்ள தொம்சன் மீது அதிக புகார்கள் உள்ள காரணத்தால், பொலிஸார் அவரைக் கைது செய்ய முடிவு செய்துள்ளனர்.
அதன்படி, தொம்சனின் பிறந்தநாளன்று பொலிஸார் அவரது வீட்டுக்கு சென்று, கைது செய்து கையில் விலங்கு மாட்டியுள்ளனர்.
அப்போது, பொலிஸாரின் அனுமதியுடன் தான் காதலித்த பெண்ணின் கையில் முத்தமிட்டு காதலை தெரியப்படுத்தியுள்ளார் தொம்சன்.
இந்தச் சம்பவம் பொலிஸார் ஒருவரின் ஆடையில் மாட்டியிருந்த கமெரா வில் பதிவாகி, இப்போது இணையங்களில் பகிரப்பட்டுவருகின்றது. (இ)

# மோடி இன்னொரு காந்தி

### அமைச்சர் வைத்த 'ஐஸ்'

BJP MP compares Modi with Mahatma Gandhi




"இந்திய தேசத் தந்தை மகாத்மா காந்தியை நான் பிரதமர் நரேந்திர மோடியிடம் காண்கிறேன், அவரைப்போலவே பல தலைமுறைகளுக்கு இவரும் உத்வேகம் அளித்துள்ளார்" என்று இந்திய மத்திய அமைச்சர் மகேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.
'உப்புச் சத்தியாகிரகம்' பற்றிய நூல் அறிமுக நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மத்திய பண்பாட்டு அமைச்சர் மகேஷ் சர்மா மேலும் கூறுகையில்,
"இன்று நம்மிடையே இன்னொரு காந்திஜி போல் நம் பிரதமர் இருப்பது அதிர்ஷ்டமே, இவர் அனைவருக்கும் உத்வேகமாகத் திகழ்கிறார்.
உப்புச் சத்தியாகிரகம் என்பது உப்பு பற்றியது மட்டுமல்ல, தலைமுறைகளுக்கு உத்வேகமளிக்கும் விஷயமாகும், இதையேதான் பிரதமர் மோடி இப்போது செய்து வருகிறார்.
நாட்டின் ஒவ்வொருவருக்கும் சுதந்திர ஒளி கிடைக்கும் என்ற ரீதியில்தான் பிரதமர் இயங்குகிறார்,
பிரதமரது கனவு காந்திஜியின் கனவுகளை நிறைவேற்றுவதாகும்"என்றார். (இ)



## சீனாவின் அமைதிப்புறா சிறைக்குள் உயிரிழப்பு

அமைதிக்கான நோபல் பரிசு வென்ற சீனாவின் லியு சியாபோ (வயது 61)கல்லீரல் புற்றுநோய் காரணமாகச் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மரணமடைந்ததாக வடகிழக்கு சீன நகரமான ஷென்யாங் அரசு தெரிவித்தது.
2009 ஆம் ஆண்டு சீன அரசுக்கு எதிராக கலகத்தைத் தூண்டியதாக இவர் மீது குற்றம்சாட்டப்பட்டு 11 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதையடுத்து சிறையில் இருந்து வந்தார். அரசியல் சீர்த்திருத்தங்களுக்கான 'சார்ட்டர் 08' என்ற மனுவை எழுதுவதற்கு இவர் உதவி புரிந்ததாகவும் இதனால் அரசு அதிகாரத்தை எதிர்த்து கலகம் செய்ததாகவும் சீன அரசினால் குற்றம்சாட்டப்பட்டார். சிறையில் இருக்கும் போதே 2010 ஆம் ஆண்டு இவருக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு கிடைத்தது.
ஜுலை 12 ஆம் திகதி லியுவின் ஆரோக்கியம் மேலும் மோசமடைந்தது. இவரது உடல் நலம் குறித்த தகவல்களைச் சீன அரசு தன்கட்டுக்குள்வைத்திருந்த போதும், இவரை நடத்திய விதம் குறித்தும் சர்வதேச அளவில் கடும் விமர்சனங்கள் எழுந்திருந்தன. இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் மரணமடைந்துள்ளார். (இ)

# ஈராக் இராணுவத்தின் கொடூரக் கொலைகள்




கடந்த வாரம் ஐ.எஸ். தீவிரவாதிகளிடமிருந்த மொசூல் நகரைக் கைப்பற்றிய ஈராக் இராணுவத்தினர், அங்கிருந்த ஐ.எஸ் தீவிரவாதி ஒருவரை மலை உச்சியில் இருந்து தள்ளிய வீடியோ பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
கடந்த 9 மாதங்களாக நடந்த யுத்தம் காரணமாக ஐ.எஸ் தீவிரவாதிகள் வசம் இருந்த மொசூல் நகரை ஈராக் இராணுவம் கடந்த வாரம் கைப்பற்றியது.இந்நிலையில் ஈராக் இராணுவத்தினர் அங்கிருக்கும் சில தீவிரவாதிகளை உயிருடன் பிடித்துள்ளனர். அது தொடர்பான வீடியோ ஒன்றே தற்போது வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
அந்த வீடியோவில் ஈராக் இராணுவத்தினர், ஐ.எஸ் தீவிரவாதி ஒருவரை அடித்து துன்புறுத்துகின்றனர். அதன் பின் அவரை அங்கிருந்து அழைத்துச் சென்று, மலையின் உச்சியில் இருந்து தள்ளிவிடுகின்றனர்.
கீழே விழுந்த அந்தத்தீவிரவாதியை, இராணுவத்தினர் மேலே இருந்த நிலையில், தாங்கள் வைத்திருக்கும் துப்பாக்கியை வைத்து சுட்டுத் தள்ளியுள்ளனர்.தீவிரவாதிகள் தான் இது போன்ற கொடூரமான செயல்களில் ஈடுபடுவர். அதே போன்று இராணுவத்தினரும் செய்திருப்பது பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.இது குறித்து ஈராக்கின் உள்துறை அமைச்சர் தெரிவிக்கையில் "இந்த வீடியோ நிரூபிக்கப்பட்டால், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்" எனத் தெரிவித்துள்ளார். (இ)

## சிறை

பிரேசில் நாட்டின் முன்னாள் அதிபர் லூயிஸ் இனிசியோ லூலா மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் உள்ளன.
இதில், பொறியியல் நிறுவனங்களிடம் இருந்து 12 லட்சம் அமெரிக்க டாலரை லஞ்சமாகப் பெற்றது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் அவருக்கு 10 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (இ)

## சிறையிலும் லஞ்சம்

பெங்களூர்ச் சிறையில் சசிகலாவுக்குச் சிறப்பு சலுகைகள் வழங்க 2 கோடிரூபா லஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாக ஐ.பி.எஸ் அதிகாரி தாக்கல் செய்த அறிக்கை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
சிறைத்துறை டி.ஐ.ஜியான ரூபா, கர்நாடக டி.ஜி.பி ஆர்.கே.தத்தாவுக்கு எழுதியுள்ள அறிக்கையில் சிறைத்துறை டிஜிபி ஹெச்.எஸ். சத்யநாராயண ராவ் மற்றும் சிறை அதிகாரிகள் குறித்து குற்றம்சாட்டியுள்ளார்.
சசிகலாவுக்காக சிறப்புச் சமையலறை உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் பகீர் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தத் தகவல் பெரியளவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், கர்நாடக முதல்வர் சித்தராமையா தனது அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கத்தில், "பெங்களூர் மத்திய சிறைச்சாலையில் முறைகேடுகள் நடப்பதாக எழுந்துள்ள புகார் தொடர்பாக உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.
விசாரணை முடியும்வரை பொறுமையுடன் இருங்கள்.
குற்றவாளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்" எனக் குறிப்பிட்டுள்ளார். (இ)

## ஆண்களின் தீவு

ஜப்பானின் கியூஷூ மற்றும் கொரிய தீபகற்பத்துக்கு இடையில் அமைந்துள்ளது ஒகினோஷிமா தீவு. இந்தத் தீவுக்கு ஆண்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் அவர்களும் அங்கிருக்கும் கடற்கரைக்குச் செல்ல வேண்டுமேனால், தனது உடைகள் அனைத்தையும் கழற்றிவிட்டு நிர்வாணமாகத்தான் செல்ல முடியும். இது அங்கு சட்ட விதியாக உள்ளது.இந்தத் தீவை ஷிண்டோ பாதிரியார்கள் பாதுகாக்கிறார்கள், அதனால் பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. (இ)






## யார் அந்த தேவதை?

ரஷ்ய ஜனாதிபதியின் காருக்குள் இருந்த சிவப்பு உடை அணிந்த பெண்மணிதான் அவரது புதிய காதலியா என அங்குள்ள செய்தி ஊடகங்கள் விவாதத்தில் மூழ்கியுள்ளன.
ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அரசியல் பரபரப்பில் இருந்து விடுபட்டு நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள அவருக்கு பிரியமான கடற்கரை விடுதி ஒன்றில் விடுமுறையைக் கழித்து வருகிறார்.
இந்த நிலையில் தமது கறுப்பு வண்ண மெர்சிடஸ் காரில் அப்பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றுக்கு, தாமே வாகனத்தை செலுத்தி சென்றுள்ளார் புடின் .
இதில் வாகனத்தின் முன் இருக்கையில் இருந்து வெளியே வந்த ரஷ்ய ஜனாதிபதி புடின், பின்பக்க கதவினைத் திறக்க முயற்சிக்க, அதில் சிவப்பு வண்ண உடை அணிந்து அல்லது சிவப்புக் கைப்பையுடன் ஒருவர் அமர்ந்திருந்துள்ளார்.
புடின் வாகனத்தின் கதவினைத் திறக்க முயற்சிக்க, அந்தப் பெண்ணோ கண்ணிமைக்கும் நேரத்தில் கதவினை மூடச் சொல்லியுள்ளார்.
இது செய்தி ஊடகங்களின் பார்வையில் சிக்க, தற்போது புடினின் புதிய காதலி அவரா என்ற விவாதம் எழுந்துள்ளது. கடந்த 2014 ஆம் ஆண்டு தமது மனைவியை விவாகரத்து செய்த பின்னர் மறுமணம் செய்துகொள்ளாமலே புடின் இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)




# மகுடம் யாருக்கு? இறுதிச்சமர் நாளை

‘கிராண்ட்ஸ்லாம்’ அந்தஸ்துப் பெற்ற விம்பிள்டன் தொடரின் இறுதியாட்டத்தில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் - ஸ்பெய்னின் கார்பின் முகுருஜா ஆகியோர் நாளையதினம் பலப்பரீட்சை நடத்தவுள்ளனர்.

நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் அரையிறுதியில் ஸ்பெயின் வீராங்கனை கார்பின் முகுருஜா 6:1, 6:1 என்ற புள்ளிக் கணக்கில் ஸ்லோவோக்கியாவின் ரைபரிகோ வாவைப் பந்தாடினார்.

மற்றொரு அரையிறுதியில் 11ஆம் நிலை வீராங்கனையும், 5 தடவைகள் சம்பியனுமான அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், 6:4, 6:2 என்ற புள்ளிக் கணக்கில் 7ஆம் நிலை வீராங்கனையான இங்கிலாந்தின் ஜோஹன்னா கோன்டாவை வீழ்த்தினார்.

2009ஆம் ஆண்டுக்குப் பிறகு விம்பிள்டனில் இறுதிப்போட்டியை எட்டியிருக்கும் 37 வயதான வீனஸ் வில்லியம்ஸ், மகுடம் சூடினால் ‘ஓபன் எரா’ வரலாற்றில் (1968 ஆம் ஆண்டுக்குப் பிறகு) அதிக வயதில் பட்டம் வென்றவர் என்ற சிறப்பைப் பெறுவார்.

நாளைய தினம் நடக்கும் சம்பியன் பட்டத்துக்கான இறுதியாட்டத்தில் மோதும் வீனஸ்-முகுருஜா இருவரும் இதுவரை சந்தித்த 4 ஆட்டங்களில் 3இல் வீனஸ் வெற்றி பெற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விபத்தில் சிக்கிய உதைபந்து வீரர்கள்

கானாவில் உதைபந்தாட்ட வீரர்கள் சென்ற பஸ் விபத்துக்குள்ளானதில் காயமடைந்த வீரர்கள் மற்றும் அணி அதிகாரிகள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கானாவின் அக்ரா என்ற இடத்தில் கானா பிரீமியர் லீக் தொடர் நடைபெற்றது. இந்தப் போட்டியில் பங்கேற்க அசான்டே கொடோகோ அணி பஸ்ஸில் சென்றது.

அப்போது எதிரே வந்த பஸ் மீது வீரர்கள் சென்ற பஸ் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதில் அசான்டே அணியைச் சேர்ந்த வீரர்கள் மற்றும் அணியின் அதிகாரிகள் காயமடைந்தனர். அவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ)

## உதயதாரகை உதைபந்தாட்டம்: காலிறுதியில் றேஞ்சஸ்



கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்திவரும் பருத்தித்துறை மற்றும் வடமராட்சி லீக் அணிகளுக்கிடையிலான 7 பேர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரில், நேற்று நடைபெற்ற காலிறுதியாட்டம் ஒன்றில் றேஞ்சஸ் அணி வெற்றிபெற்று, அரையிறுதிக்கு முன்னேறியது.

இந்தக் காலிறுதிப் போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி, உடுப்பிட்டி நவஜீன்ஸ் அணியை எதிர்த்து விளையாடியது.

முதல் பாதியாட்டம் எவ்வித கோல்களுமின்றி முடிவடைந்தது. இரண்டாவது பாதியாட்டத்தில் சில மாற்றங்களுடன் களமிறங்கிய றேஞ்சஸ் அணி, வேகமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அதன் பயனாக 30ஆவது நிமிடத்தில் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திய அந்த அணியின் வீரரான ரவிவர்மன், நீண்ட தூரத்திலிருந்து உதைத்த பந்து கோலாக மாறியது. ஆட்ட நேர முடியில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்ற றேஞ்சஸ் அணி அரையிறுதிக்குள் நுழைந்தது.

ஆட்டநாயகனாக வர்மன் தெரிவுசெய்யப்பட்டார். (ஐ)



## “திரும்ப வந்துட்டோம்னு சொல்லு”

இந்தியாவில் நடைபெற்று வரும் ஐ.பி.எல். தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை எவரும் அவ்வளவு எளிதில் மறந்திருக்க வாய்ப்பில்லை.

டோனி, ரெய்னா, பிராவோ, மக்கலம், அஸ்வின் மற்றும் ஜடேஜா என ஒரு நட்சத்திரப் பட்டாளத்தையே கொண்டிருந்தது சென்னை அணி.

இதனால் தலா இரண்டு தடவைகள் ஐ.பி.எல் சம்பியன், சம்பியன்ஸ் லீக் சம்பியன் என அசத்தியதுடன், நான்கு தடவைகள் ஐ.பி.எல்லில் இரண்டாவது இடத்தையும், இரண்டு தடவைகள் அரையிறுதி வரை முன்னேறியும் அசத்தியது.

அப்படிப்பட்ட அணிதான் 2015ஆம் ஆண்டு எழுந்த சூதாட்ட புகார் காரணமாக இரண்டு ஆண்டுகளுக்குத் தடையை எதிர்நோக்கியிருந்தது.

இந்நிலையில் அதற்கான தடை இன்று முடிந்துள்ளது. இதைத் தொடர்ந்து 2018 ஆம் ஆண்டு சென்னை அணி மீண்டும் ஐ.பி.எல்லில் களமிறங்கவுள்ளது.

அதற்காக சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தனது டுவிட்டர்பக்கத்தில் “வந்துட்டோம்னு சொல்லு, திரும்பி வந்துட்டோம்னு சொல்லு விசில் போடு” என பதிவேற்றம் செய்துள்ளது. (ஐ)

## KFC அறிமுகப்படுத்தும் ஸ்மார்ட் கைத்தொலைபேசி

உலகளவில் பிரபல்யமான KFC நிறுவனம், 1987 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்த வருடம் இந் நிறுவனம் 30 ஆண்டுகளைகளைப் பூர்த்தி செய்கின்றது.

இதனைக் கொண்டாடும் முகமாக ஸ்மார்ட் கைத்தொலைபேசி ஒன்றை தனது பெயருடன் அறிமுகம் செய்ய விருக்கின்றது.

எனினும் இக் கைத்தொலைபேசியை சீனாவிலேயே அறிமுகம் செய்து வைக்கவுள்ளது.

இதன் சிறப்பம்சங்களாக 5.5 அங்குல அளவு, 1280 x 720 Pixel Resolution கொண்ட தொடுதிரை, Qualcomm Snapdragon 435 Processor, பிரதான நினைவகமாக 3GB RAM மற்றும் 32GB சேமிப்பு நினைவகம் என்பவற்றைக் கொண்டுள்ளது.



தவிர பிங்கர் ப்ரிண்ட் ஸ்கானரையும் உள்ளடக்கியுள்ளது. சிவப்பு நிறத்தைக் கொண்ட இவ்வாறான 5,000 கைத்தொலைபேசிகள் சீனாவில் அறிமுகம் செய்யப்படவுள்ளன.

இதேவேளை இக் கைத்தொலைபேசியின் கமராக்களின் திறன் உட்பட விலை தொடர்பான தகவல்கள் வெளியிடப்படவில்லை. (ஒ)

## பிக்பாஸ்: கவர்ச்சி குறைத்த ஓவியா



விஜய் தொலைக்காட்சியின் ‘பிக் பாஸ்’ நிகழ்ச்சி சமீபத்தில் பல சர்ச்சைகளில் சிக்கியது. ஆபாசமாக இருப்பதால் அதைத் தடை செய்யவேண்டும் என ஒரு கூட்டம் கிளம்பியது, “சேரி” என்ற வார்த்தையை நடிகை காயத்ரி பயன்படுத்தியதால் அவர் மீதும் புகார் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் ஆபாசம் ஒன்றும் இல்லை என கமல் பேட்டியளித்திருந்த நிலையில், நேற்று ஒளிபரப்பப்பட்ட ‘பிக் பாஸ்’ நிகழ்ச்சியில் அரை குறை ஆடையுடன் வலம் வந்த நடிகை ஓவியா, பிறகு ஒரு போட்டிக்காக 15 தோப்புக்கரணம் போடவேண்டும் எனக் கூறப்பட்டது.

குழந்தைகள் எல்லாம் ஷோ பார்ப்பார்கள். ஆடை அரை குறையாக இருப்பதால், பேன்ட் அணிந்து வந்த பிறகு தோப்புகரணம் போடும்படி மற்றப் போட்டியாளர்கள் சொல்ல உடனே ஓவியா உள்ளே சென்று காற்சட்டை அணிந்து வந்து போட்டியைத் தொடர்ந்தார். (ஒ)

## ஹிந்தியிலும் தெறிக்கவிட்ட விஜய் படம்

விஜய்யின் ‘தெறி’ படம் ஹிந்தியில் மொழிமாற்றம் செய்யப்பட்டு யூ டியூபில் வெளியாகி இருந்தது. படம் வெளியான முதல் நாளே 20 லட்சம் பேர் பார்த்துள்ளனர். அது மாத்திரம் இல்லாமல் நான்கு நாட்களில் 87 இலட்சத்துக்கும் அதிகமான ரசிகர்கள் பார்த்திருக்கின்றனர்.

அத்துடன் படத்தை வட இந்தியர்கள் பலரும் கொமெண்ட்களில் பாராட்டியிருந்தனர்.

இந்நிலையில் ஹிந்தி தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பப்பட்ட இப்படத்தை 4 இலட்சத்துக்கும் அதிகமானோர் பார்த்துள்ளனர் எனவும் தகவல்கள் வந்துள்ளன.

தமிழிலிருந்து மொழி மாற்றம் செய்யப்பட்ட படம் ஒன்றுக்கு வட இந்தியாவில் இத்தனை வரவேற்பு கிடைத்திருப்பது விஜய் ரசிகர்களைக் குஷிப்படுத்தியிருக்கிறது. (ஒ)



## இன்றைய கருத்தோவியம்



நன்றி - அத தெரண

# பங்களாதேஷ் வீரர்களுக்கு மைத்திரி அஞ்சலி



பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹஸீனா அம்மையாரின் அழைப்பின்பேரில் அந்நாட்டில் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தில் ஈடுபட்டுள்ள ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன இன்று பிற்பகல் பங்களாதேஷ் தேசிய வீரர்களின் நினைவுத் தூபிக்கு மலரஞ்சலி செலுத்தினார். 1971 ஆம் ஆண்டு பங்களாதேஷ் தேசிய சுதந்திரப் போராட்டத்தின் வீரர்களை கௌரவிப்பதற்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த இராணுவ நினைவுத்தூபி, தலைநகர் டாக்காவிலிருந்து சுமார் 34 கிலோமீற்றர் தொலைவிலுள்ள சவார் பிரதேசத்தில் அமைந்துள்ளது. அங்கு விஜயம் செய்த ஜனாதிபதியை பங்களாதேஷ் இராணுவ நலன்புரி தொடர்பான அமைச்சர், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் ஆகியோர் வரவேற்றனர். தனது விஜயத்தை நினைவுக்கூரும் வகையில் அங்கு மரக்கன்று ஒன்றினை நாட்டிய ஜனாதிபதி, விசேட பிரதிநிதிகள் நினைவுக்குறிப் பேட்டிலும் கையெழுத்திட்டார். (உ)

## சுற்றிவளைப்பு 772 பேர் கைது

நாடு பூராகவும் மேற்கொள்ளப்பட்ட விஷேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 772 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேற்றுமுன் தினம் அதிகாலை முதல் நேற்று மாலை வரையான காலப் பகுதியில், நாடளாவிய ரீதியில், 14,000 பொலிஸார் இணைந்து இந்த விஷேட சுற்றிவளைப்பை முன்னெடுத்திருந்தனர். இதன்போது, பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புபட்ட 110 பேர் மற்றும் ஹெரோயின் வைத்திருந்த 85 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
அத்துடன், கஞ்சா வைத்திருந்த வழக்குடன் தொடர்புடைய 264 பேர், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த வழக்குடன் தொடர்புடைய 221 பேர், மண், கழிவு ஏற்றிச் சென்ற விவகாரம் தொடர்பில் 124 பேர் இந்தக் காலப் பகுதியில் கைதாகியுள்ளதாக, பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.
மேலும், மது போதையில் வாகனம் செலுத்தியமை தொடர்பாக 368 பேர், சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய வழக்கு தொடர்பில் 320 பேர், கவனயீனமாக வாகனம் செலுத்திய வழக்கு தொடர்பில் 222 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
அத்துடன், இந்தச் சுற்றிவளைப்புக்களின் போது, 3 துப்பாக்கிகள், கைக்குண்டு ஒன்று மற்றும் 22 கிராம் ஹெரோயினும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (உ)

## மாகாண மட்டத்தில் கல்விப் போட்டியை உருவாக்குங்கள்



மாகாண மட்டத்தில் கல்வி சார்ந்த போட்டியை உருவாக்க வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். கல்வியை அரசியல் மயப்படுத்தாது முன்னெடுத்துச்செல்வது அரசாங்கத்தின் நோக்கமென்றும் பிரதமர் கூறினார்.பலப்பிட்டி சித்தார்த்த மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் , இவ்வாறான போட்டியின் மூலம் ஏனைய மாகாணங்கள் கொழும்பு நகருடன் போட்டியிடும் நிலைமை உருவாகுமென்றும் குறிப்பிட்டார். பிரதமர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், 13 வருட பாடசாலை கல்வியை கட்டாயமாக்குவது உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்கள் சகலருக்கும் டெப் கணனிகளை வழங்குவது ஆகிய இரு விடயங்களில் அரசாங்கம் கூடுதல் அக்கறை கொண்டுள்ளது. பாடசாலை கல்வியின் கடைசி இரண்டு வருடங்களில் தொழில் பயிற்சி பெற்றுக்கொடுப்பது அரசாங்கத்தின் மற்றொரு அபிலாஷை என்றார். (உ)

## மீனவர்களை விடுவிக்க எடப்பாடி கடிதம்

இலங்கை சிறையிலுள்ள 60 மீனவர்கள் மற்றும்146 படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கூறி இந்தியப் பிரதமருக்கு தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி கடிதம் எழுதியுள்ளார். தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளும், வாழ்வாதாரமும் பாதுகாக்கப்படும் வகையிலும், இலங்கை அரசின் கைது நடவடிக்கைகள் நிறுத்தப்படும் வகையிலும் ஒரு தெளிவான உறுதியான தகவலை இலங்கை அரசுக்கு இந்தியா அனுப்ப வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். (உ)

## செப்ரெம்பருக்குள் இழப்பீடு

உமா ஓயத் திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ஆலோசனை வழங்கியுள்ளார். இதில் பல தீர்மானங்கள் எட்டப்பட்டன. இதன்போது செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்குள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் காரணமாகப் பண்டாரகம எல்ல வெலிமடை ஊவா பரணகம ஹப்புத்தளை பிரதேசங்களைச் சேர்ந்த 32 கிராமங்களில் வசிக்கும் மக்கள் தீவிர பிரச்சினைகளை எதிர் கொள்கிறார்கள். இவற்றுக்குத்தீர்வு கண்டு நிவாரண நடவடிக்கைகளை சீரபடுத்த கால அட்டவணையுடன் திட்டமொன்றை அமுலாக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். (உ)

## பிபிலை வனத்தில் தீ நூறு ஏக்கர் சேதம்



பிபிலை நில்கல பாரிய வனப் பிரதேசத்தில் நேற்று ஏற்பட்ட தீயினால் நூறு ஏக்கர் வனப்பகுதி சேதமடைந்துள்ளது. இதனால் பெருமளவிலான மூலிகைகள் நாசமாகியுள்ளன. இத் தீயினால் மிருகங்கள் பலவும் உயிரிழந்திருக்கக் கூடுமென்று அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். நில்கல பகுதி பெரும் புகை மூட்டமாக காணப்பட்டது. அந்தப் பகுதியைச் சேர்ந்த பொலிஸாரும், இராணுவத்தினரும்,பொது மக்களும் இணைந்து தீயைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டும் பயனளிக்கவில்லை. (உ)

# மீட்பு ரயிலும் தடம்புரண்டது சீரமைப்புப் பணி தீவிரம்



கொட்டகலையில் நேற்று அதிகாலை தடம் புரண்ட ரயில் பெட்டிகளை அகற்றுவதற்காக கொழும்பிலிருந்து சென்ற விசேட ரயில் நாவலப்பிட்டியில் நேற்று மாலை தண்டவாளத்திலிருந்து தடம் புரண்டுள்ளது. எனினும் தடம்புரண்ட ரயில் சீரமைக்கப்பட்டு கொட்டகலையை அடைந்துள்ளது.
இந் நிலையில் இப்பாதையினை சீர் செய்வதற்கு தேவையான பொருட்கள் கொழும்பு, கண்டி, நாவலப்பிட்டிய பிரதான ரயில் நிலையங்களிலிருந்தும் கொழும்பு வீதியூடாகவும் நானுஓயாவிலிருந்து பதுளை வீதியூடாகவும் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், அதிகமான புகையிரத தொழிநுட்ப வியலாளர்களையும் ஊழியர்களையும் இரவு பகல் சேவையில் ஈடுபடுத்தி மிக விரைவில் ரயில் பாதையினை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் ரயில் திணைக்கள கட்டுப்பாட்டு அதிகாரியொருவர் தெரிவித்தார். (உ)


## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

'எதிரொலி' மாலைத் தினசரிக்கு
விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

வேலை நேரம்: மாலை 4 மணி முதல் மாலை 6.30 வரை (இரண்டரை மணித்தியாலங்கள்)
வேதனம்: 15,000 + ஊக்கப்படி

தொடர்புக்கு:
021 300 4848, 077 657 5907
ethirolimedia@gmail.com




## நாளை நாளும் கோளும்

15.07.2017 சனிக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆனி மாதம் 31ஆம் நாள்
சஷ்டி மு.ப. 11.45 வரை | உத்தரட்டாதி மு.இ. 10.28 வரை | சித்தயோகம்
இராகுகாலம் 09.00-10.30 | சுபநேரம் 03.00-04.30 | எமகண்டம் 01.30-03.00
ஊரெழு கிழானைபதி பருவதவர்த்தனி அம்மன் கொடியேற்றம்

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நட்டம் | நிறைவு | மறதி | தடை | வாழ்வு | கோபம் | களிப்பு | பகை | சினம் | இன்பம் | துன்பம் | ஆதரவு |

## அந்த நாள் ஞாபகம்.....!



**1995.07.14**

இலங்கை இராணுவத்தினரின் முன்னேறிப்பாய்தல் நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் புக்காரா ரக விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.

## வழிநடத்தல் குழுவிலிருந்து
# விலகும் விமல்

வழிநடத்தல் குழுவிலிருந்து கூட்டு எதிர்க்கட்சி வெளியேறும் காலம் தற்போது ஏற்பட்டுள்ளதாக அவ்வணியின் ஆதரவு உறுப்பினரும், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸ சுட்டிக் காட்டியுள்ளார். வழிநடத்தல் குழுவிலிருந்து ஒரு உறுப்பினர் விலகினால் கூட, அல்லது பாராளுமன்றத்தில் ஒரு உறுப்பினர் எதிர்த்தால் கூட அரசியலமைப்பினை நிறைவேற்ற முடியாது என்பதை நினைவில் வைத்து நாட்டின் இறைமையை பாதுகாக்கும் வகையில் அரசாங்கம் செயற்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். இடைக்கால அறிக்கை வரைவு தயாரிக்கப்படவில்லை என அரசாங்கம் கூறினாலும் அது தயாரிக்கப்பட்டு விட்டது. அந்த ஆவணத்தில் ஒற்றை ஆட்சி என்பது நீக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தமிழில் ஒற்றை ஆட்சி வாசகம் நீக்கப்பட்டு ஒருமித்த இலங்கை என்று மாற்றப்பட்டுள்ளது இது ஆபத்தானது என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (உ)



வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் வட மாகாண பொலிஸ் அதிகாரிகளை இன்று தனது அலுவலகத்தில் அழைத்துக் கலந்துரையாடினார்.

## நெடுந்தீவுக் குதிரைகளை
# பாதுகாக்க குழு



நெடுந்தீவுக் குதிரைகளைப் பாதுகாக்கும் வழிமுறைகள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு வடக்கு முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் குழுவொன்றை நியமித்துள்ளார். நெடுந்தீவில் அண்மையில் வறட்சி காரணமாகக் குதிரைகள் இறந்துள்ளன என்ற செய்தி ஊடகங்களில் வெளியானதையடுத்தே முதலமைச்சரால் இந்த விசேட குழு அமைக்கப்பட்டுள்ளது. முன்னாள் சுற்றுச் சூழல் அமைச்சரும் மாகாணசபை உறுப்பினருமான பொ.ஐங்கரநேசன் தலைமையிலான இக்குழுவினருக்கான நியமனக் கடிதங்களை முதலமைச்சர் வழங்கி வைத்துள்ள நிலையில், இவர்கள் நேற்று நெடுந்தீவுக்குச் சென்று அங்கு குதிரைகள் வாழுகின்ற பிரதேசங்களில் கள ஆய்வுகளை மேற்கொண்டதோடு, பிரதேச செயலகத்தில் கலந்துரையாடலையும் மேற்கொண்டுள்ளனர். (எ)

# பொலித்தின் தடைக்கு கடும் எதிர்ப்பு

இந்த நாட்டில் பொலித்தினை தடைசெய்வது பொருளாதாரத்துக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாக பொலித்தின் விற்பனையாளர்களும் உற்பதியாளர்களும் கடும் விமர்சனத்தை முன்வைத்துள்ளனர். எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் பொலித்தின், லஞ்ச் ஷீட், ஷொப்பிங் பாக் மற்றும் ரெஜிபோம் தயாரிப்புக்கு தடை விதிக்கப்படுவதாக அமைச்சரவையின் இணைப்பேச்சாளர் அமைச்சர் ரஜித சேனாரட்ன அறிவித்துள்ள நிலையில் இவ்வாறான விமர்சனத்தினை அவர்கள் விடுத்துள்ளனர். இத்துடன் கால அவகாசம் வழங்காதவாறு இவ்வாறான தி டீர் அறிவிப்பை விடுப்பதான தமது தொழில் முயற்சிக்கு பாரிய நட்டத்தினை ஏற்படுத்தியுள்ளதாகவும் அதற்குரிய இழப்பீடு பற்றிக் கூட அரசாங்கம் சிந்திக்காதிருப்பது வேதனைக்குரியது என்றும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (உ-09)

# தடை

நாரஹேன்பிட்டி, அபேராம விகாரையில் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்து உத்தரவிட்டுள்ளது. அபேராம விகாரையை அரசியல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதன் ஊடாக பக்தர்களுக்கு அசௌகரியம் ஏற்படுவதால், அவ்வாறான நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்குமாறு கோரி மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

## அடிக்கல் நாட்டுவிழா



வரலாற்று பிரசித்தி பெற்ற ஒட்டுசுட்டான் தான் தோன்றி ஈஸ்வரர் ஆலய ஒன்பது தள இராஜ கோபுரத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று அதிகாலை சிறப்புற இடம்பெற்றது. (உ)

# ரணிலின் தந்திரத்தை வெளியிட்டது ஜே.வி.பி

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை சீர்குலைத்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை பிளவுபடுத்துவதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் திட்டம் என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்நாயக்க தெரிவித்துள்ளார். கடந்த காலத்தில் திருட்டு வேலைகளில் ஈடுபட்டவர்கள் தற்போது அரசாங்கத்தில் உள்ளார்கள். அவர்களின் திருட்டு சம்பந்தமாக தகவல்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் திருடர்கள் திருட்டை ஆரம்பித்துள்ளார்கள். இவர்களின் திருட்டு அடுத்த அரசாங்க காலத்திலேயே வெளியாகும். அவ்வாறு இருக்கையில் இப்போது திருட்டுகளில் ஈடுபட்டவர்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். காரணம் அவ்வாறு பாதுகாப்பதனால் தான் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிளவடையும் அவ்வாறு பிளவடைந்தால் தான் தனது அரசியல் இலக்கை அடைவதற்கு அது சாதகமாக அமையும் என்பதே அவருடைய நோக்கமாகும் என்றார். (உ-09)


# சமையல்காரர் தேவை



நன்கு சமைக்கத் தெரிந்த சமையல்காரர் ஒருவர் (பெண்) அவசரமாகத் தேவை.

சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு:
0777 412 713 / 0773 200 727


## தொடர்ச்சிகள்

### பிரபாகரனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரபாகரன் உயிரிழந்து எட்டு ஆண்டுகள் கடந்துள்ளன. இந்த நிலையிலும் கற்பனைகளும் வதந்திகளும் தொடர்கிறன.

2006ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் நான் இலங்கையில் தூதுவராக கடமையாற்றினேன். காலத்திற்கு காலம் வெளியாகி வரும் கற்பனை கதைகள் பிழையான தகவல்கள் பற்றி தெளிவளிக்கப்பட வேண்டியது அவசியமானது என எண்ணுகின்றேன். புலிகளுக்கு உதவும் எவ்வித நோக்கமும்

எங்களுக்கு இருக்கவில்லை. எனினும் அப்பாவி பொதுமக்களை மீட்பதற்கு கடுமையான முயற்சிகள் எடுக்கப்பட்டன.

2015ஆம் ஆண்டு தேர்தல் இலங்கையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. எனினும், காணாமல் போனோர் அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் காத்திரமான தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்படவில்லை என ரொபர்ட் ஓ பிளக் குறிப்பிட்டுள்ளார். (எ)

### அதிகாரத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர்,

யுத்த காலத்தில் பொலிஸாருக்கு எதிரான செயற்பாடுகள் இடம்பெற்றன. ஆனால் யுத்தத்தின் பின்னர் பொலிஸ் அதிகாரத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய இடத்தில் எமது இளைஞர் யுவதிகள் வரவேண்டும். அவ்வாறு வரும்போது தற்போதுள்ள பொலிஸார் மெல்ல மெல்ல தெற்குக்குச் சென்று விடுவார்கள். இளைஞர் யுவதிகளை பொலிஸ் சேவையில் இணைப்பதற்குரிய விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 500 வெற்றியிடங்கள் காணப்படுகின்றன. பட்டதாரிகள் அதிலுள்ள மேல் மட்டப் பதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார். (எ-04)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 14.07.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.